# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கோயமுத்தூர் பிரிவு அலுவலகத்தை அணுகி தான் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போது, கோயமுத்தூர் வெரைட்டி ஹால் ரோடு காவல் நிலையத்தைச் சேர்ந்த திரு.இருளப்பன், சிறப்பு உதவி ஆய்வாளர், மற்றும் திரு.கணேசன், சிறப்பு உதவி ஆய்வாளர் ஆகியோர் தனது வாகனத்தை பிடித்து வைத்துக்கொண்டு வழக்கு ஏதும் பதிவு செய்யாமல் வாகனத்தை விடுவிப்பதற்கு லஞ்சமாக ரூ.1,700/- கொடுக்க வேண்டும் என்று கேட்பதாக புகார் மனு அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 09.03.2021 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.இருளப்பன், சிறப்பு உதவி ஆய்வாளர், திரு.கணேசன், சிறப்பு உதவி ஆய்வாளர் வெரைட்டி ஹால் ரோடு காவல் நிலையம், கோயமுத்தூர் லஞ்ச பணமான ரூ.1,700/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

**PRESS NOTE**

The complainant approached the Vigilance & Anti – Corruption, Coimbatore Detachment, and gave complaint that his two wheeler had been detained by Tr.Irulappan, Special Sub Inspector of Police and Tr.Ganesan, Special Sub Inspector of Police, Variety Hall road Police Station, Coimbatore, and for releasing the same without registering any case, demanded Rs.1,700/- as bribe money. In this connection a case was registered and a trap was organized today 09.03.2021.

During the course of trap proceedings, Tr.Irulappan, Special Sub Inspector of Police and Tr.Ganesan, Special Sub Inspector of Police, reiterated the earlier demand and received the bribe amount of Rs.1,700/- from the complainant. Both the accused were arrested.